DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S. 144/2025** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW1** |
| **Name** | : | ஸ்வீட் பியூலா செல்வராணி |
| **Husband's Name** | : | ஜான் மில்டன் |
| **Village** | : | டோனாவூர் |
| **Taluk** | : | நாங்குநேரி |
| **Age** | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 22.01.2026

**சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1**. 20.07.2008 தேதியிட்ட விளம்பர நாளிதழ் **வா.சா.ஆ 2**. ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரின் தகப்பனாரான சாலமோனின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ 3**. ஜான் ஸ்டீபன் ராஜ் என்பவரின் தாயாரான சுசிலா என்பவரின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ 4**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.